**த. நா.ச.பே. எண் : 017** **நாள் : 28.09.2015**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 28.9.2015

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதனிலைத் தொழிலாக விளங்கும் வேளாண் தொழிலை வளர்ச்சி அடையச் செய்து உணவு தானிய உற்பத்தியை பெருக்குவதிலும், உணவு தந்துதவும் உழவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதிலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்கும் வகையில், பல முனைப்பான நடவடிக்கைகளை கடந்த நான்கு ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

எனது தலைமையிலான அரசு வேளாண்மைத் துறையில் அறிமுகப்படுத்திய பல்வேறு நவீன அணுகுமுறைகளால், கடந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி 127.95 லட்சம் மெட்ரிக் டன் என புதிய சாதனையை படைத்துள்ளது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அதிகபட்ச உணவு தானிய உற்பத்தி அளவான 82.64 லட்சம் மெட்ரிக் டன் என்ற அளவை விட இது 55 சதவீதம் கூடுதல் ஆகும்.

தமிழகம் வேளாண் உற்பத்தியில் தொடர்ந்து சாதனை புரிய ஏதுவாக, நடப்பாண்டில் பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழகத்தில் வேளாண் பணிகள் தங்கு தடையின்றி நடைபெறவும், வேளாண் தொழிலாளர்களின் பற்றாக் குறையினை குறைக்கும் வகையிலும், வேளாண் இயந்திரமயம் ஆக்கும் திட்டத்தினை எனது தலைமையிலான அரசு கடந்த 4 ஆண்டுகளாக தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. கடந்த நான்காண்டுகளில், 245 கோடி ரூபாய் மானியத்தில் 1.72 லட்சத்திற்கும் மேலான வேளாண் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டிலும், காலத்தே வேளாண் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக பண்ணை இயந்திரங்கள் வாங்க மானியம் வழங்கப்படும். 761 நெல் நடவு இயந்திரங்கள், 938 பவர் டில்லர்கள், 201 டிராக்டர்கள், 370 சுழற் கலப்பைகள், 1,231 விசைக் களை எடுப்பான்கள், 335 பல்வகைப் பயிர் கதிர் அடிக்கும் இயந்திரங்கள், பயறு வகைகள், மணிலா போன்ற பயிர்களில் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிப்பதற்கு 612 விதைப்புக் கருவிகள், 505 தட்டு வெட்டும் கருவிகள் Chaff cutters, 55 சிறப்பின தானியங்கி இயந்திரங்கள் Specialized Self propelled machinery, 101 தென்னை ஓலை துகளாக்கும் இயந்திரங்கள் Coconut frond choppers, 120 தெளிப்பான்கள், 15 நிலக் கடலை பறிக்கும் கருவிகள் Groundnut pod strippers, 67 புதர் அகற்றும் கருவிகள் Brush cutters, 372 மனிதத் தோழமைக் கருவிகள் Gender friendly equipment மற்றும் இதர கருவிகள் வாங்க 80 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. உயர் விளைச்சல் பெறுவதற்கு, நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவது அவசியமாகும். இத்தகைய தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து செயல்படுத்தி வருவதால், தமிழகம் வேளாண் உற்பத்தியில் சாதனை படைத்து வருகிறது. 2015–16 ஆம் ஆண்டிலும், வேளாண் பயிர்களில் நவீன தொழில் நுட்பங்களை

விவசாயிகள் செயல்படுத்துவதற்காக, மாநிலம் முழுவதும் 3 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் செயல் விளக்கங்கள் அமைக்கப்படும். இதற்காக 65 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், விவசாயிகள் இடு பொருட்களை உரிய காலத்தில் பெற்று, புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்தி அவர்களின் விளைச்சலும் வருமானமும் உயர வழிவகை ஏற்படும்.

3. விவசாயிகளின் மகசூலை உயர்த்தி, வருமானத்தை அதிகரிக்கும் தரமான விதைகளை அதிக அளவில் விவசாயிகளுக்கு வழங்குவதைக் கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டு தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை உருவாக்கப்படும் என நான் சட்டப்பேரவையில் விதி 110–ன் கீழ் அறிவித்திருந்தேன். அதன்படி, இம்முகமை தமிழகத்தில் உரிய பணியாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு 30.4.2015 அன்று ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இம்முகமையின் மூலம், தேவையான தரமான விதைகளை உற்பத்தி செய்து காலத்தே விநியோகம் செய்வதற்காக “ஒருங்கிணைந்த செயல் திட்டம்” ஒன்று உருவாக்கப்பட்டு, விதை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக, இம்முகமைக்கு 25 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் 29 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர்களுக்கு உற்பத்தி மானியம் மற்றும் விநியோக மானியம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. விவசாயிகளுக்கு தேவையான நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் தரமான சான்று விதைகள் மற்றும் தரமான நடவுச் செடிகள் மாநிலத்தில் இயங்கும் 41 அரசு விதைப் பண்ணைகள் மற்றும் 56 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகளில் நீர் ஆதாரங்களை பெருக்கி, நவீன இயந்திரங்களை அதிக அளவில் பயன்படுத்தி, தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கி, தரமான விதை, நடவுச் செடி உற்பத்தியினை மேலும் அதிகரிக்கவும், அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ற தொழில்நுட்பங்களை விளக்கவும், இத்தகைய அரசுப் பண்ணைகள் படிப்படியாக மாதிரிப் பண்ணைகளாக தரம் உயர்த்தப்படும். இதற்காக 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. தாவர புரதச் சத்து தேவையை ஈடு செய்ய, நடவு முறை துவரை, ஊடு பயிர் மற்றும் புதர்ச் செடி முறையில் துவரை சாகுபடி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாக 2.5 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த பயறு வகை உற்பத்தி 2013–14 ஆம் ஆண்டு 6.14 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. எனவே நமக்கு கிரிஷி கர்மான் விருதை மத்திய அரசு வழங்கியது. 2014–15 ஆம் ஆண்டில் பயறு வகை உற்பத்தி 7.23 லட்சம் மெட்ரிக் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில், நடப்பாண்டில், நடவு முறை துவரை, தரமான விதை உற்பத்தி, வரப்புப் பயிர் மற்றும் டி.ஏ.பி. இலை வழி உரம் தெளிப்பு உள்ளிட்ட பல்வேறு நவீன உத்திகளால் பயறு வகை உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவை 10 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. தமிழகத்தில் காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் நவீன தோட்டக்கலை உத்திகளை ஊக்குவித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை

உறுதி செய்யவும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பசுமைக் குடில் அமைத்தல், நிழல் வலைக் குடில்கள் அமைத்தல் போன்ற பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி முறைகளில் பாசன நீரினை சிக்கனமாக பயன்படுத்தி, விளைச்சலை அதிகரிக்க முடியும் என்பதால், இத்தகைய நவீன பாதுகாக்கப்பட்ட சூழலில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியினை மேற்கொள்ள 56 கோடியே 76 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்த உதவும் நுண்ணீர்ப் பாசன முறை மூலம் பாசனப் பரப்பை உயர்த்தவும், நீர் வழி உரமிடல் முறை மூலம் உரத் தேவையைக் குறைக்கவும் களை பிரச்சினையை குறைக்கவும் இயலும். மத்திய அரசு நுண்ணீர் பாசன திட்டத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவீதமும் இதர விவசாயிகளுக்கு 40 சதவீதமும் மானியத்தை வழங்கி வந்தது. இருப்பினும், எனது தலைமையிலான அரசு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் வழங்கி வந்தது. நடப்பாண்டில் மத்திய அரசு, மத்திய அரசின் மானியத்தை 35 சதம் மற்றும் 25 சதம் என குறைத்துள்ளது. இருப்பினும், எனது தலைமையிலான அரசு தற்போது வழங்குவதைப் போன்றே சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் தொடர்ந்து வழங்கும். நடப்பாண்டில் 1.29 லட்சம் ஏக்கரில் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கென 296 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. இஸ்ரேல் உள்ளிட்ட மேலை நாடுகளில் உயரிய அறிவியல் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி, பயிர் சாகுபடியில் அதிக மகசூல் பெற்று வருகிறார்கள். அதே போன்று, தமிழக விவசாயிகளும் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்துவது, விளைபொருள் தரத்தினை உயர்த்துவது உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை நன்கு அறிந்து செயல்படுத்தி லாபம் ஈட்ட வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழகத்தில் உள்ள 100 முன்னோடி விவசாயிகளுக்கு தோட்டக்கலைப் பயிர்களில் நன்கு முன்னேறியுள்ள வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமல்லாது, நமது நாட்டில், பிற மாநிலங்களில் பின்பற்றி வரும் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும் உள்நாட்டு கல்விச் சுற்றுலாவுக்கு 10,000 விவசாயிகள் அழைத்துச் செல்லப்படுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. நகர்ப்புற மக்களின் காய்கறித் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. காய்கறிகள் வெகு தூரத்திலிருந்து நகரங்களுக்கு நாள்தோறும் கொண்டு வரப்படுவதால், சாகுபடி மற்றும் காய்கறி வரத்துக்கேற்ப காய்கறிகளின் விலை மாறுபடுகிறது. நகர்ப்புற மக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை களையும் வகையில் எனது தலைமையிலான அரசு, மாநகர மக்களுக்குத் தேவையான சத்தான காய்கறிகளை அவர்களே உற்பத்தி செய்து கொள்ளும் வகையில், காய்கறி சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்கள் அடங்கிய நீங்களே செய்து பாருங்கள் தளைகளை நகர்ப்புற மக்களுக்கு விநியோகிக்கும் திட்டத்தை சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தி, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு நகர்ப்புற மக்களிடம் அதிக வரவேற்பு உள்ளதால், நடப்பாண்டில் திருச்சி மற்றும் மதுரை மாநகர மக்களும் பயன்பெறும்

வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கான இடுபொருட்கள் மக்களுக்கு எளிதில் கிடைப்பதற்காக மாநகராட்சி அமைப்புடன் ஒருங்கிணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான தொழில்நுட்ப உதவிகள் விவசாயத் துறை மூலம் வழங்கப்படும். 5 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

10. 'மண்ணின் வளமே மகசூலுக்கு ஆதாரம்', 'நலமான வாழ்விற்கு நஞ்சற்ற உணவே ஆதாரம்' என்பதை வலியுறுத்தும் இயற்கைப் பண்ணைய முறையினை விவசாயிகளிடம் பிரபலப்படுத்த எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் வழங்கி வருகிறது. மண் வள மேம்பாட்டிற்காக நடப்பாண்டில் பசுந்தாள் உர உபயோகம் விவசாயிகளிடையே பெருமளவில் பிரபலப்படுத்தப்படும். மேலும், பாரம்பரிய இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க மானிய விலையில் மண்புழு உரம், அங்கக முறையில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் கொள்முதல், திரவ உயிர் உரங்கள், பாஸ்பேட் செறிவூட்டப்பட்ட இயற்கை உரங்கள், உயிரி பூச்சிக் கொல்லிகள் உள்ளிட்ட இயற்கை இடுபொருட்கள் பயன்பாட்டை அதிகப்படுத்தி தொகுப்பு அணுகு முறையில் அங்ககக் கிராமங்கள் அமைக்கப்படும். மேலும், இத்தகைய விவசாய நிலங்களுக்கு அங்ககச் சான்றளிப்பை வழங்குவதற்கும் எனது அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். இத்திட்டம் சுமார் 8 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

11. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவியருக்கான புதிய தங்கும் விடுதிகள் அனைத்து வசதிகளுடன் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென நடப்பாண்டில் 22 கோடியே 95 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

12. தமிழக வேளாண்மையில் மானாவாரி சாகுபடிப் பரப்பளவு ஏறக்குறைய 40 சதவீதமாகும். மானாவாரி விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, அதிகரித்து வரும் வெப்ப நிலை, பருவம் தவறிய மழை, நீர் பற்றாக் குறையினால் பாதிப்பு ஆகிய இடர்பாடுகளிலிருந்து, விவசாயிகளை பாதுகாக்க இவ்வரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. நடப்பாண்டில், மானாவாரி விவசாயிகளின் வருமானத்தை பெருக்கிடவும், பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்திடவும், கறவை மாடுகள் / ஆடுகள் வளர்ப்புடன் இணைந்த ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம் 48 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள், விவசாயிகள் இடு பொருட்களை உரிய காலத்தில் பெற்று, புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்தி அவர்களின் விளைச்சலும் வருமானமும் உயர வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**